**மாவட்ட சாலைப்பாதுகாப்பு குழு**

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராகவும் மேலும் 13 நபர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது மாதம் ஒரு முறை கூடி கீழ்கண்ட பொருள்களை ஆய்வு செய்ய வேண்டும்.

1) சாலை விபத்துக்கள் குறித்த தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.
2) சாலை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் அவற்றின் தரத்தை மேம்படுத்துதல்.
3) சாலைத் தளவாடங்கள், தேவையான வழிகாட்டி பலகைகள், புதிய திட்டங்கள் கட்டுமானம் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தல்.
4) சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
5) தலைக்கவசம் மற்றும் இருக்கைப் பட்டை (சீட் பெல்ட்) அணிவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
6) சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்துதல்.
7) சென்னை நகருக்கென்று தனியாக காவல்துறை ஆணையரை தலைவராகவும் மற்றும் பதினெட்டு உறுப்பினர்களையும் கொண்டு சென்னை பெருநகர மாவட்ட சாலைப்பாதுகாப்பு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும், மாவட்ட சாலைப்பாதுகாப்பு குழு கூட்டத்தை நடத்தி சாலைப்பாதுகாப்பு குறித்த பணிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மேற்கூறிய கூட்டத்தில் எடுத்த முக்கிய முடிவுகள் போக்குவரத்து ஆணையர் / சாலைப்பாதுகாப்பு ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.